## செறிவாக்கப்பட்ட குருதிச்சிறுதட்டுக்கள்

## <u>Platelet rich plasma (PRP)</u>

PRP ஆனது ஒரு நவீன மருத்துவ முறையாகும். இது பல்வேறு தோல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

### 1. PRP எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

குருதி மாதிரியானது பல தடவைகள் வடிகட்டலுக்கு (Centrifuge) உட்படுத்தப்பட்டு PRP தயாரிக்கப்படும்.

### 2. PRP இன் முக்கியத்துவம்.

PRP ஆனது அதிகளவான வளர்ச்சிக்காரணிகளை (Growth Factors) கொண்டுள்ளது. இது கலங்களினதும் இழையங்களினதும் விருத்திக்கு உதவும். இந்த PRPஆனது ஒருவரின் சொந்த குருதி மாதிரியிலிருந்து தயாரிக்கப்படுவதால் ஒவ்வாமை மற்றும் பக்க விளைவுகள் மிகவும் அரிதானதாகும்.

### 3.PRP பாவிக்கப்படும் தோல் சம்பந்தமான பிரச்சினைகள்

- ஹோமோன் (Hormone) சம்பந்தமான தலைமுடி உதிர்வு (Patterned hair loss)
- ஆலொபெசியா அரியேட்டா (Alopecia areata)
- வயதாகும்போது ஏற்படும் தோல் சுருக்கங்கள்
- பல்வேறு வகையான தழும்புகள் உ-ம் முகப்பருக்களினால் ஏற்படும் தழும்புகள்
- நாட்பட்ட புண்கள்
- வரி தழும்புகள் (Stretch marks)

### 4. PRP பாவிக்கப்படமுடியாத நிலைமைகள்

- அசாதாரன குருதிச்சிறுதட்டுக்களை உடையோர்
- முன்பு எப்போதாவது ஒவ்வாமை ஏற்பட்டவர்கள்
- Auto immune disease ஆல் பாதிக்கப்பட்டவர்கள்
- குருதி உறைவதை தடுக்கும் மருந்துகளை எடுப்பவர்கள்

### 5. PRP எவ்வாறு பாவிக்கப்படுகிறது

- முதலில் விறைக்கும் கிறீம் பூசப்பட்டு தோல் விறைக்கச்செய்யப்படும்
- பின்பு PRP ஆனது ஊசிமூலம் தோலினுள் ஏற்றப்படும்

- சிலவேளைகளில் PRP ஆனது microneedling அல்லது லேசர் சிகிச்சையுடன் சேர்த்து பிரயோகிக்கப்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் PRP ஆனது தோலின் மீது பூசப்படும்.
- PRP சிகிச்சையானது பலதடவைகள் செய்யப்படும் போதுதான் அதன் உச்ச பலனை பெற முடியும். இந்த சிகிச்சையின் பலனை உணர்ந்துகொள்ள 8 கிழமைகள் காத்திருக்கவேண்டும்.

## 6. பக்கவிளைவுகள்

- ஊசிமூலம் ஏற்படுவதனால் ஏற்படும் நோ
- கிருமித் தொற்றுக்கள்